# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
# PROSECUTION WITNESS

SC. No. 130/2021 Crime No. 54/2017 Station Rayakottai PS

| Name | Murugan | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**25.02.2026.**

**எ.த.சா.1 முதல் விசாரணை**

இந்த வழக்கில் நான் 2வது எதிரி. 1வது எதிரி என்னுடைய அப்பா ஆவார். புகார்தாரர் சூர்யா மீது இராயக்கோட்டை காவல் நிலைய குற்ற எண்.55/2017 பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றஎண்.55/2017 க்கான முதல் தகவல் அறிக்கையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் **எ.த.சா.ஆ.2** ஆகும். குற்ற எண்.55/2017 க்கான இறுதி அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் **எ.த.சா.ஆ.3** ஆகும். குற்ற எண்.55/2017 க்கான பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் **எ.த.சா.ஆ.4** ஆகும். குற்ற எண்.55/2017 வழக்கில் சாட்சிகளின் பட்டியல் நீதிமன்ற சான்றிட்ட நகல் **எ.த.சா.ஆ.5 ஆகும்.** குற்ற எண்.55/2017 வழக்கில் சாட்சிகளின் வாக்குமூலங்களின் நீதிமன்ற சான்றிட்ட நகல் **எ.த.சா.ஆ.6**ஆகும். குற்ற எண்.55/2017 ல் எங்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காயச்சான்றிதழின் நீதிமன்ற சான்றிட்ட நகல் **எ.த.சா.ஆ.7** ஆகும். சூர்யா என் அப்பாவை வெட்டிவிட்டார். என் அப்பாநிலத்தில் வெட்டிவிட்டார். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். சூர்யாவிற்கும் எங்களது குடும்பத்திற்கும் 2011ல் இருந்து நிலப் பிரச்சனை இருந்து வருகிறது. எங்களுக்குள் அப்போது வழக்கு நடந்தது.

**குறுக்கு விசாரணை அரசு தரப்பில்**

இந்த வழக்கில் நான் 2 வது எதிரி என்றால் சரிதான். குற்ற எண்.55/2017 ல் சூர்யா மீது தேன்கனிக்கோட்டை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் பட்டியல் வழக்கு எண்.62/2023 என கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் சூர்யாவை அடித்தது சம்மந்தமாக சூர்யா எங்கள் மீது இழப்பீடு கேட்டு

தேன்கனிக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.51/2021 தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கு முதலில் ஓசூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த வழக்கில் நாங்கள் வழக்கறிஞர் வைத்திருந்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் நாங்கள் மேல்முறையீடு செய்திருக்கிறோமா என்றால் ஆமாம். நாங்கள் அடித்தற்கு சூர்யா எங்கள்மீது புகார் கொடுத்து இந்த வழக்கு நடக்கிறது என்றும் எங்களை சூர்யா அடித்தற்கு தேன்கனிக்கோட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது என்றால் சரிதான். நாங்கள் அவரை அடிக்கவில்லை. நாங்கள் சூர்யாவை அடித்தற்கு இந்த வழக்கில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டுள்ள காயம் குற்ற எண்.55/2017 ல் மருத்துவர் சொற்ப காயம் என்று சான்றிதழ் வழங்கியிருக்கிறார் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

ஓம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,

சார்பு நீதிபதி,

தேன்கனிக்கோட்டை.